මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
MINISTRY OF FINANCE AND MASS MEDIA

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය - මුදල් / அலுவலகம் - நிதி / Office - Finance: (+94)-11-2484500, (+94)-11-2484600, (+94)-11-2484700
ෆැක්ස් - මුදල් / பெக்ஸ் - நிதி / Fax - Finance: (+94)-11-2449823
කාර්යාලය - ජනමාධ්‍ය / அலுவலகம் - வெகுசன ஊடக / Office - Mass Media: (+94)-11-2513459, (+94)-11-2513498, (+94)-11-2512324
ෆැක්ස් - ජනමාධ්‍ය / பெக்ஸ் - வெகுசன ஊடக / Fax - Mass Media: (+94)-11-2513458
වෙබ් අඩවි / வெப் சைட்கள் / Websites: www.treasury.gov.lk, www.media.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No. BD/RDS/106/07/04 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2017.07.26

**தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கை இல: 03/2016 (II)**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள் யாவருக்கும்

**தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டத்தின்கீழ் நன்மை பெறுவதற்கான ஏற்பாடுகள்**

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் 2017 யூலை 24 ஆந் திகதி இடம்பெற்ற அவசர அனர்த்தங்களின் போதான தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டத்தின் நன்மை பெறுவதற்கான ஏற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கான கூட்டத்தின் முன்மொழிவுக்கு அமைவாக, இத்திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் ஊடாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு மதிப்பீடுகள் மற்றும் விலை மதிப்பீட்டு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு பதிலாக மாவட்ட செயலாளர்கள் ஊடாக நேரடியாக சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைவாக 2016.12.30 ஆந் திகதி இவ்விடயம் தொடர்பாக என்னால் வெளியிடப்பட்ட 03/2016 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 03.2-(iii) ஆம் பந்தி பின்வருமாறு திருத்தப்படுகின்றது;

“அனர்த்த நிலைமையினை முகாமைசெய்வதற்கு உரிய பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுப்பதுடன் தொடர்புடைய அனைத்து விபரங்களையும் (அனர்த்த மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் ஏனைய விபரங்களையும்) உரிய மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைப்பார். அதன் பின்னர் மாவட்டச் செயலாளர் அவற்றினை (மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் ஏனைய விபரங்களை) தனது சிபாரிசுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பயனாளிகளுக்கான நன்மைகளை விடுவிக்கும்”

**ஒப்பம்/ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்
5. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர்
6. சுகாதாரம், போசாக்கு, சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர்
7. மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்

(4–7: அலுவலர்களுக்கு தேவையான அறிவுருத்தல்களை வழங்குவதற்காக)

8. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தலைவர்
9. கணக்காய்வாளர் அதிபதி